[23rd August 1960

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The area for the introduction of Compulsory Elementary Education during 1960–61 has not been selected on the basis of blocks. Three thousand three hundred and ninety-nine villages forming about one-third of the area of the State have been selected.

(*b*) The number of children to be additionally enrolled under the scheme during 1960–61 will be roughly 1,15,000.

(*c*) Roughly 2,875 teachers may be employed newly in schools.

SRI P. G. MANICKAM : எந்த எந்த ஜில்லாக்களிலே இத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லா ஜில்லாக்களிலும் கிராமங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

SRI N. MARUDACHALAM : எப்போது அமுலுக்கு இத திட்டம் கொண்டுவரப்படும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : கல்வி வருஷ ஆரம்பத்திலிருந்து.

Parambikulam waters

* 409 Q.—SRI A. A. RASHEED :
SRI N. K. PALANISAMI :
SRI T. SAMPATH :
SRI T. S. RAMASWAMI : } Will the Hon.

the Minister for Works be pleased to state—

(*a*) whether any settlement has been arrived at with the Kerala Government regarding the sharing of Parambikulam waters recently; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) A copy of the agreement [a] reached betwen the Madras and Kerala Governments on 4th July 1960 in respect of Parambikulam-Aliyar Project is placed on the table of the House.

SRI A. A. RASHEED : Sir, May I know whether the agreements reached with the Kerala Government now in any way differs with the agreement reached with the previous Government, i.e., when the Communist Ministry was in power?

THE HON. SRI P. KAKKAN : There is a slight alteration. 300 million c. ft. of water we are giving.

SRI N. K. PALANISAMI : முதல் ஒப்பந்தத்தில் பம்பையாறு சேர்க்கப்பட்டிருந்ததா? அப்படியானால் இந்த ஒப்பந்தத்தில் அது விடப்பட்டதற்கு காரணம் என்ன?

[a] Printed as Appendix III on page 543 infra.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

23rd August 1960]

THE HON. SRI P. KAKKAN : பம்பையாறுக்கும் இந்த எக்ரிமென்ட்டுக்கும் சம்பந்தம் இல்லை.

Political agitation

*** 410 *Q.*—SRI A. VEDARATHNAM :** கனம் உள்ளிவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் உள்ள அரசியல் கட்சிகள் கூட்டணி ஏற்படுத்தி, அதன் மூலம் பலாத்காரப் புரட்சி நடத்தப் போவதாகப் பொதுக்கூட்டங்களில் பேசி வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

(இ) அதற்கு அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No. Sir,

(*b*) & (*c*) Does not arise.

SRI A. VEDARATHNAM : சில அரசியல் கட்சியார்கள் தஞ்சை ஜில்லாவில் பலயிடங்களில் பலாத்கார பிரசாரம் செய்து கொண்டு வருகிறார்களே. இப்பொழுது எல்லையில் நெருக்கடி இருக்கிற இந்த சமயத்தில் இந்த மாதிரி பிரசாரம் செய்ய அனுமதிப்பது சரியா ? அப்படியானால் ஸி.ஐ.டி. ரிப்போர்ட் கொண்டு தெரிந்து அப்படி பிரசாரம் செய்கிறவர்களை தடை செய்து, அப்படி பிரசாரம் செய்கிற கட்சியை சட்ட விரோதமான கட்சி என்று "டிக்ளேர்" செய்ய முன்வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏமாற்றம் அடைகிற அரசியல் கட்சிகள் பிரமாதமாகப் பேசலாம். அந்தப் பேச்சை அரசாங்கம் பிரமாதமாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் உருப்படியாக பலாத்காரத்தைத் தூண்டும் வகையில் யார் பேசினாலும் நடந்து கொண்டாலும் அப்போதைக்கப்போது கவனம் செலுத்தி அமைதியை நிலைநாட்ட வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகிறது.

SRI A. A. RASHEED : Sir, on a point of order. The Hon. Minister has stated that the statement relating to the Parambikulam Project has been placed on the table of the House. But no statement has been placed on the table of the House.

MR. SPEAKER : I have got a copy of it.

SRI A. A. RASHEED : But I have not got a copy of it.

SRI N. MAHALINGAM : Sir, I have got a copy of it.

MR. SPEAKER : Anyhow it is with all of us except the hon. Member, Sri Rasheed.